செ.வெ.எண்:324/2020 நாள்: 01.05.2020

**கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சியில் மே மாதம் 1-ம் தேதி தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, பரிவட்டம் கட்டி, காவல் துறையினரின் மரியாதை காப்பு அணிவகுப்பு செலுத்தி, பழத்தட்டுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள்**

உலகம் முழுவதும் மே 1-ம் தேதி தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி சார்பில், மே 1-ம் தேதி மாநகராட்சி ஆணையாளர் திரு.கே.சரவணகுமார் அவர்கள் தலைமையில், நாகர்கோவில் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில், நகர் நல அலுவலர் மரு.கிங்சால் ஆகியோர் முன்னிலையில் மே தின விழா நாகர்கோவில் மாநகராட்சி அலுவலக வளாகத்தில், தூய்மை பணியாளர்களை கௌரவிக்கும் விழாவாக இன்று (01.05.2020) நடைபெற்றது.

விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.என்.ஸ்ரீநாத் இ.கா.ப., அவர்கள் ஆகியோர், மாநகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்றுநோய் தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள 246 நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கும், 652 தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கும், அவர்களுடைய பணியினை பாராட்டி, அவர்களை கௌரவப்படுத்தும் விதமாக, சுமார் 25 தூய்மை பணியாளர்களுக்கு, தலையில் பரிவட்டம் கட்டி, காவல் துறையினரின் மரியாதை காப்பு அணிவகுப்பு செலுத்தி, பழத்தட்டுகளை வழங்கி பாராட்டி, பேசியதாவது :-

நமது மாவட்டத்தில் கொரோனா தொற்றுநோய் பரவாமல் தடுக்கப்பட்டதில் தூய்மை பணியாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. இன்று மே 1-ம் தேதி தொழிலாளர்கள் தினமாக கொண்டாடப்படுவதால், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள, தூய்மை பணியாளர்களை கௌரவிப்பது, விழாவிற்கு பொருத்தமானதாகும். தூய்மை பணியாளர்களாகிய உங்களுக்கு நேரில் நன்றி செலுத்த நாங்கள் இவ்விழாவினை பயன்படுத்திக்கொண்டோம். தூய்மை பணியாளர்கள் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகள் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் தங்களது குடும்பத்தை, குழந்தைகளை பாராமல், சுயநலம் கருதாமல் இப்பணியில் ஈடுபட்டுள்ளது பாராட்டுக்குரியது. தூய்மை பணியாளர்கள் தங்களது உயிரை பணயம் வைத்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தூய்மை பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். தூய்மை பணியாளர்களை இன்று கௌரவிப்பது மிகச்சிறப்பானதாகும். பொதுமக்களும் தூய்மை பணியாளர்கள் தங்களது பகுதியில் தூய்மை பணியில் ஈடுபடும்போது, அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும், அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களுடைய பணி மேலும் சிறப்பாக அமையும். தூய்மை பணியாளர்களும் உற்சாகமாக தங்களது பணியில் ஈடுபடுவார்கள். நமது மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு பணியில் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத்துறையை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட்டு வருவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மீண்டும் ஒருமுறை நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பிற தூய்மை பணியாளர்களுக்கு மாநகராட்சியின் அந்தந்த பகுதிகளிலுள்ள பிரிவு அலுவலகத்தில், மாநகராட்சி அலுவலர்கள் அப்பகுதியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு, பரிவட்டம் கட்டி, பழத்தட்டுகளை வழங்கி, கௌரவப்படுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாநகராட்சி பணியாளர்கள் சார்பில், சங்கத்தலைவர் திரு.ஆர்.ராஜா, செயலாளர் திரு.எஸ்.நாகராஜன் ஆகியோர் துப்புரவு பணியாளர்கள் என்பதை பெயர் மாற்றி தூய்மை பணியாளர்கள் என அறிவித்து, அதற்கான ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.என்.ஸ்ரீநாத் இ.கா.ப., அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டார்கள்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.